<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2020ம் ஆண்டு மே மாதம் 29ஆம் நாள் (29.05.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி TN 57 AY 9358 ன் தகுதி சான்று பணிகள் மதுரை, ASR பணிமனையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாகனத்தின் ஹோஸ் மிகவும் பழையதாக உள்ளதால் குடிதண்ணீர் வெளியே சென்று விடுகிறது. எனவே, 20 மீட்டர் ஹோஸ் மற்றும் Discharge pipe line இதே பணிமனையில் பொருத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 18,000/– ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **827, நாள். 29.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் கொடைக்கானல் நகராட்சியில் வளம் மீட்பு மையம் (Resource Recovery Centre (RRC)) ரூ. 18.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 28819–14/பி3 /2019 நாள். 2.12.2019 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் போதுமான இடம் உள்ளதால் வளம் மீட்பு மையத்தினை (Resource Recovery Centre (RRC)) நகராட்சி குப்பை கிடங்கில், ரூ. 21.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) வளம் மீட்பு மையத்தினை (Resource Recovery Centre (RRC)) நகராட்சி குப்பை கிடங்கில் அமைத்திட அனுமதிக்கலாம்.
2) அரசு ஒதுக்கீடு போக மீதத் தொகையினை நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு ந.க.எண்.3513/2019/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **828, நாள். 29.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) தமிழக அரசின் மூன்றாண்டு சாதனை மலரில் கீழ்க்கண்ட நாளிதழ்களுக்கு விளம்பர வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 11/செ.மதொ/2020 நாள். 20.02.2020 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியின் மூலம் வளர்ச்சி பணிகளை வெளியிட்ட வகையில் தொகை வழங்க கோரி கீழ்க்கண்ட விவரப்படி நாளிதழ்களின் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | நாளிதழின் பெயர் | பட்டியல் எண் | நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | KAL PUBLICATIONS தினகரன் | 3300220181 | 20.3.2020 | 37500 |
| 2 | News Men Associates மக்கள் குரல் | MDUMB 202100066 | | 37800 |
| 3 | தமிழக நியூஸ் | 042 | 15.5.2020 | 28350 |

பட்டியலின்படி தொகையினை நாளிதழ் நிறுவனங்களுக்கு பொது நிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **829, நாள். 29.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகர் பகுதியில் குடிநீர் வழஙகும் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளதால், நகர் பகுதியில் சீரான குடிநீர் வழஙக இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, தனியார் குடிநீர் லாரியினை வாடகைக்கு அமர்த்தி நகர் பகுதியில் தினசரி 20 லேடுகள் வீதம் 60 நாட்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட வேண்டியுள்ளது. எனவே, 60 தினஙகளுக்கு தனியார் தண்ணீர் லாரிகளை வாடகைக்கு அமர்த்திடவும், அதற்கான செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 10.00 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **830, நாள். 29.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) திடக்கழிவு மேலாண்மை, தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 22866/பி3/2018 நாள். 23.8.2018–ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | அப்பர் லேக் சாலையில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |
| 2 | சிவனடி ரோட்டில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |
| 3 | ஆனந்தகிரி 4–வது தெருவில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |
| 4 | கொய்யாப்பாறை பகுதியில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |
| 5 | ஆட்டோ டிப்பர் ( 2டன் கொள்ளவு ) வாகனம் 8 எண்ணம் வாஙகுதல் | 44.80 |
| 6 | Biomining முறையில் குப்பைகளை அகற்றம் செய்திட | 247.00 |
| | மொத்தம் | 476.60 |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப அலுவலரின் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத் தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்திரவு வழஙகப்பட்டுள்ளது. இதில் வரிசை எண். 4 மற்றும் 5 ல் காணும் பணி முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது.

**<u>நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre)</u>**

நுண்ணுரம் செயலாக்க மையம் அமைத்திட கீழ்க்கண்ட பணிகளுக்கு பார்வை 1–ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவில் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | அப்பர் லேக் சாலையில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |
| 2 | சிவனடி ரோட்டில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |
| 3 | ஆனந்தகிரி 4–வது தெருவில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |
| 4 | கொய்யாப்பாறை பகுதியில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |

இதில் வரிசை எண். 3 ல் காணும் பணி முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது. வரிசை எண். 1, 2 மற்றும் 4 ல் காணும் பணிகள் பொதுமக்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாக பணி துவக்கப்படவில்லை. மேலும், கொடைக்கானல் நகரின் காற்று மற்றும் நிலத்தின் ஈரப்பதம் அதிகமாகவும், அதிக மழைப் பொழிவும் உள்ளது. கொடைக்கானல் நகர் பகுதியில் அதிகபட்ச வெப்ப நிலை சராசரியாக 20 டிகிரி சென்டிகிரேட் ஆகவும் குறைந்தபட்ச வெப்ப நிலை சராசரியாக 9 டிகிரி சென்டிகிரேட் ஆகவும் உள்ளது. இதனால், இந்நகராட்சி பகுதியில் உருவாகும் மக்கும் குப்பைகளை உரமாக மாற்றுவது இயலாத சூழ்நிலையில் உள்ளது.

**Biomining**

வரிசை எண். 6–ல் காணும் Biomining முறையில் குப்பைகளை அகற்றம் செய்திடல் பணி நடைபெற உள்ள இடத்தினை அண்ணா பல்கலைக் கழக சுற்றுசூழல் பயிற்சி மையம் மற்றும் கட்டுமான பொறியியல் துறை வல்லுநர்களின் ஆய்வில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

" After the field visit by the team it was observed that the total volume of the legacy wastes could not be ascertained as the original profile of land over which the waste is dumped could not be traced. Hence it is felt by the PMC team that bio-mining process is not feasible in this ULB"

மேலும், பார்வை 2 ல் காணும் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ஆய்வு கூட்ட நடவடிக்கையில் கொடைக்கானல் நகரில் Biomining முறையில் குப்பைகளை அகற்றம் செய்திட ஏற்ற சாத்திய கூறுகள் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பைகளைக் கொண்டு கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உரம் தயாரிப்பது என்பது சாத்தியமில்லாத பணியாக தற்போது உள்ளது. இந்நகரானது வருடத்தில் மார்ச், ஏப்ரல், மே மற்றும் ஜீன் ஆகிய நான்கு மாதஙகள் மட்டுமே வெப்பமான தட்ப நிலை உள்ளது. எஞ்சிய எட்டு மாதஙகளும் காற்று மற்றும் நிலத்தின் ஈரப்பதம் அதிகமாகவும், அதிக மழைப் பொழிவும் உள்ளது. கொடைக்கானல் நகர் பகுதியில் அதிகபட்ச வெப்ப நிலை சராசரியாக 20 டிகிரி சென்டிகிரேட் ஆகவும் குறைந்தபட்ச வெப்ப நிலை சராசரியாக 9 டிகிரி சென்டிகிரேட் ஆகவும் உள்ளது. இதனால், இந்நகராட்சி பகுதியில் உருவாகும் மக்கும் குப்பைகளை உரமாக மாற்றுவது இயலாத சூழ்நிலையில் உள்ளது.

மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் ரூ. 110.00 இலட்சம் மதிப்பீட்டில் குப்பை கிடஙகில் குப்பைகளை பிரித்து உரமாக்கும் இயந்திரஙகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. பணி முடிவுற்றவுடன் குப்பைகளை உரமாக்கும் பணி துவக்கப்பட்டுவிடும். இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் கொடைக்கானல் நகருக்கு மாற்று திட்டம் தயார் செய்திட கோரி M/s Recity Network Pvt. Ltd.Mumbai நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

எனவே, வரிசை எண். 1,2 , 4 மற்றும் 6 ல் கண்டுள்ள பணிகளுக்கு வழஙகப்பட்ட நிர்வாக அனுமதியினை இரத்து செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:**</u> கொடைக்கானல் நகரம் மலைப்பிரதேசம் என்பதினால் போதுமான தட்பவெப்ப நிலை ஏதுவாக இல்லாத காரணத்தினாலும், பொதுமக்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாகவும் மற்றும் அண்ணா பல்கலைக் கழக சுற்றுசூழல் பயிற்சி மையத்தின் அறிவுரையின்படியும், வரிசை எண். 1,2,4 மற்றும் 6 ல் கண்டுள்ள பணிகளை இரத்து செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **831, நாள். 29.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.